**அன்புள்ள வாடிக்கையாளருக்கு,**

இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள நுகர்வோர் சாசனத்தின் கீழ் கோரப்பட்டுள்ள தேவையின் பிரகாரம், நாங்கள் வழங்குகின்ற உங்களுக்குத் தேவையான மற்றும் உங்களுக்குப் பொருத்தமான வங்கிக் கணக்குத் திட்டங்கள்/சேவைகளைத் தேர்ந்தெடுக்கும் போது உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, முக்கியமான விடயங்கள் உள்ளடங்கிய ஆவணங்களை [KFD] நாங்கள் தயாரித்துள்ளோம்.

முக்கியமான விடயங்கள் உள்ளடங்கிய ஆவணமானது [KFD], இலங்கை ரூபாய்களை அடிப்படையாகக் கொண்ட பல்வேறுபட்ட கணக்குகள் மற்றும் கணக்குகளுடன் தொடர்புடைய விசேட பொதிகள் மற்றும் தனிப்பட்ட வங்கியியலுக்கான நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயத்தை அடிப்படையாகக் கொண்ட கணக்குகள் ஆகியவை பற்றிய விரிவான அறிவை உங்களுக்கு வழங்கும்.

எவ்வாறாயினும், பின்வரும் முக்கியமான விடயங்கள் உள்ளடங்கிய ஆவணங்களில் (KFD) குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களானது சட்டத்தில் மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள் மற்றும் வங்கியின் கொள்கைகளிலும் நடைமுறைகளிலும் ஏற்படுகின்ற மாற்றங்கள் காரணமாக திருத்தத்திற்கு உட்பட இடமுள்ளது என்பதைக் கருத்தில் கொள்ளவும். வங்கியின் அவ்வாறான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக முக்கியமான விடயங்கள் உள்ளடங்கிய ஆவணங்களில் (KFD) ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமிடத்து வங்கி அது தொடர்பாக உங்களுக்கு அறிவிக்கும் என்பதைக் கவனிக்கவும்.

உங்களுக்கு மேற்கொண்டும் தகவல் தேவைப்பட்டால், கீழே குறிப்பிட்டுள்ளவாறு www.nationstrust.com வெப்தளம் ஊடாக எங்களைத் தொடர்பு கொள்ளவும். அல்லது 011 4 711 411 என்ற 24 மணி நேர துரித அழைப்பு மையத்துடன் தொடர்பு கொள்ளவும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள உங்களின் ஏதும் கணக்குகள் தொடர்பான ஏதேனும் முறைப்பாடுகள் இருந்தால், முறைப்பாடுகளைக் கையாளும் அதிகாரி, நேஷன்ஸ் ட்ரஸ்ட் பேங்க் பீ.எல்.சீ, இலக்கம் 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 என்ற முகவரிக்கு முறைப்பாடு உள்ளடக்கப்பட்ட சுருக்கமான ஓர் அறிக்கையை எழுத்தில் அனுப்பி வைக்கவும். அல்லது [+94(0)114711411] எனும் தொலைபேசி இலக்கம் / [customerservice@nationstrust.com] எனும் மின்னஞ்சல் மூலம் எங்களைத் தொடர்பு கொள்ளவும். நாங்கள் உங்களுக்கு விரைவில் பதிலளிக்கத் தயாராக உள்ளோம்.

| கணக்கு பற்றிய விபரங்கள் | வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கின்ற நன்மைகள் | கட்டண வகைகளும் ஏனைய வங்கி அறவீடுகளும் | ஒரு கணக்கைத் தொடங்குவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் | முக்கியமான நியதிகளும் நிபந்தனைகளும் |
|---|---|---|---|---|
| **காலவரை வைப்பு** | | | | |
| **நேஷன்ஸ் நிலையான வைப்பு** | வட்டி விகிதங்கள் 01 மாதம் தொடக்கம் 60 மாதங்கள் வரையிலான காலஎல்லையை அடிப்படையாகக் கொண்டவை. வாடிக்கையாளரின் விருப்பத்தைப் பொறுத்து முதிர்வின் போது அல்லது மாதாந்தம் அல்லது ஆண்டுதோறும் வட்டி செலுத்தப்படும்.<br><br>30 நாட்கள் முதல் 365 நாட்கள் வரையிலான காலப்பகுதியில் தேவைப்படும் நாட்களின் எண்ணிக்கையைப் பொறுத்து நிலையான ஒரு வைப்புக் கணக்கைத் திறக்கும் விருப்பத்தைத் தெரிவு செய்யலாம்.<br><br>நிலையான வைப்பு பெறுமதியின் 90% வரை மேலதிகப் பற்று வசதி மற்றும் கடன் வசதியைப் பெற்றுக் கொள்ளலாம். | நிலையான வைப்புக் கணக்கைப் பராமரிக்க வங்கிக் கட்டணங்கள் அறவிடப்பட மாட்டாது. | வங்கியின் நியம காலவரை வைப்புக் கணக்கை ஆரம்பிக்கும் படிவத்தைப் பூர்த்தி செய்து, பின்வரும் ஆவணங்களுடன் ஏதேனும் ஒரு வங்கிக் கிளையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்:<br><br>• தேசிய அடையாளஅட்டையின் (NIC) / செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் பிரதி<br><br>• தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வதிவிட முகவரி வேறுபடுமாக இருந்தால், முகவரியை உறுதிப்படுத்துவதற்கு எழுத்துமூல ஆதாரம் அவசியமாகும். | தகைமை பெறுவதற்கான வரையறைகள்:<br><br>• தேசிய அடையாள அட்டை/செல்லுபடியாகும் கடவுச்சீட்டை வைத்திருக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட இலங்கையில் வசிக்கும் இலங்கைப் பிரஜைகள்.<br>• குறைந்தபட்ச ஆரம்ப வைப்புத் தொகை ரூ. 50,000 ஆகும்.<br>• வைப்பிலிடப்பட்டு 30 நாட்களுக்கு முன் நிறுத்தப்பட்டால் (வைப்பிலிடப்பட்ட திகதி உட்பட நிறுத்தப்பட்ட திகதி தவிர) வட்டி எதுவும் செலுத்தப்பட மாட்டாது.<br>• முதிர்வுக்கு முன் நிலையான வைப்புத்தொகை திரும்பப் பெறப்பட்டால், செலுத்த வேண்டிய வட்டியானது இணங்கியுள்ள விகிதத்தை விடவும் குறைவான விகிதத்தில் மற்றும் வங்கியின் விருப்புரிமைக்கு இணங்க கணக்கிடப்படும்.<br>• முதிர்வுக்கு முன் ஒரு நிலையான வைப்புத்தொகையை திரும்பப் பெறுவதற்கு ஒரு கோரிக்கை விடுக்கப்பட்டால் மற்றும் மேற்படி கோரிக்கை முன்வைக்கபடும் போது வாடிக்கையாளருக்கு ஏற்கனவே மாதாந்த அடிப்படையில் வட்டி செலுத்தப்பட்டிருந்தால், முதிர்வுக்கு முன் திரும்பப் பெறுவதற்கான கட்டணம் அசல் வைப்புத் தொகையிலிருந்து கழிக்கப்படும். |

| கணக்கு பற்றிய விபரங்கள் | வாடிக்கையாளர்களுக் குக் கிடைக்கின்ற நன்மைகள் | கட்டண வகைகளும் ஏனைய வங்கி அறவீடுகளும் | ஒரு கணக்கைத் தொடங்குவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் | முக்கியமான நியதிகளும் நிபந்தனைகளும் |
|---|---|---|---|---|
| **அழைப்பு (Call) வைப்பு** | வட்டியானது குறைந்த பட்சம் 7 நாட்களுக்காக கணக்கிடப்பட்டு முதிர்வின் போது செலுத்தப்படும். | அழைப்பு (Call) வைப்புகளை பராமரிக்க வங்கிக் கட்டணங்கள் எதுவும் அறவிடப்பட மாட்டாது. | வங்கியின் காலவரைக் கணக்கை ஆரம்பிக்கும் படிவத்தைப் பூர்த்தி செய்து, பின்வரும் ஆவணங்களுடன் ஏதேனும் ஒரு வங்கிக் கிளையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்:<br>• தேசிய அடையாளஅட்டையின் (NIC) / செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் பிரதி<br>• தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வதிவிட முகவரி வேறுபடுமாக இருந்தால், முகவரியை உறுதிப்படுத்துவதற்கு எழுத்துமூல ஆதாரம் அவசியமாகும். | தகைமை பெறுவதற்கான வரையறைகள்:<br>• தேசிய அடையாள அட்டை/செல்லுபடியாகும் கடவுச்சீட்டை வைத்திருக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட இலங்கையில் வசிக்கும் இலங்கைப் பிரஜைகள்.<br>• குறைந்தபட்ச ஆரம்ப வைப்புத் தொகை ரூ. 100,000 ஆகும்.<br>• குறைந்தபட்ச வைப்பு காலம் 7 நாட்கள்.<br>• குறைந்தபட்ச காலவரையான 7 நாட்களுக்கு முன் வைப்புத்தொகை மீளப் பெறப்படுமானால், வட்டி எதுவும் செலுத்தப்பட மாட்டாது. |
| **வைப்புச் சான்றிதழ்** | வட்டி முன்கூட்டியே செலுத்தப்படும்.<br>உதா: ஒரு வருடத்தின் பின்னர் 12% வருடாந்த வட்டி விகிதத்தில், வைப்புச் சான்றிதழ் மீது இரண்டு மில்லியன் முதிர்வுப் பெறுமதியைப் பெறுவதானால், வாடிக்கையாளர் வைப்பிலிட வேண்டியது ரூ. | ஒரு வைப்புச் சான்றிதழைப் பெறுவதற்கு வங்கிக் கட்டணங்கள் எதுவும் அறவிடப்பட மாட்டாது. | வங்கியின் காலவரைக் கணக்கை ஆரம்பிக்கும் படிவத்தைப் பூர்த்தி செய்து, பின்வரும் ஆவணங்களுடன் ஏதேனும் ஒரு வங்கிக் கிளையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்:<br>• தேசிய அடையாள அட்டையின் (NIC) / செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் பிரதி | தகைமை பெறுவதற்கான வரையறைகள்:<br>• தேசிய அடையாள அட்டை/செல்லுபடியாகும் கடவுச்சீட்டை வைத்திருக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட இலங்கையில் வசிக்கும் இலங்கைப் பிரஜைகள்.<br>•<br>**ஏனைய நிபந்தனைகள்:**<br>• குறைந்தபட்ச வைப்புத் தொகை ரூ. 100,000 ஆகும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | 1.8 மில்லியன் மட்டுமே.<br><br>ரூ. 1.8 மில்லியனுக்கும் ரூ. 2 மில்லியனுக்கும் இடையில் உள்ள வித்தியாச தொகையானது முதிர்வின் போது செலுத்தப்பட வேண்டிய வட்டியாகும். | | தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வதிவிட முகவரி வேறுபடுமாக இருந்தால், முகவரியை உறுதிப்படுத்துவதற்கு எழுத்துமூல ஆதாரம் அவசியமாகும்.<br><br>ஒரு நியமத்தரை நியமிக்கும் படிவம். | · முதிர்வு திகதிக்குப் பிறகு இந்தச் சான்றிதழுக்காக எந்த வட்டியும் சேர்க்கப்பட மாட்டாது.<br><br>· வைப்புத் தொகைக்கான குறைந் தபட்ச காலவரை ஆறு (06) மாதங்களாகும் என்பதுடன் அதிகபட்ச காலவரை அறுபது (60) மாதங்களாகும்.<br><br>· வைப்பிலிடுகின்ற போது நிறுத்திவைத்தல் வரி (WHT) பெறப்பட வேண்டும்.<br><br>· வைப்புச் சான்றிதழ் என்பது அதை வைத்திருப்பவரின் கணக்கு அல்லாத அல்லது ஒப்புதலின் மூலம் மாற்றப்பட முடியாத ஒன்றாகும்.<br><br>· வைப்புச் சான்றிதழ் முதிர்வடைந்த பிறகு தானாகவே புதுப்பிக்க முடியாது என்பதால், பின்வரும் விருப்பங்களைத் தேர்ந்தெடுக்கலாம்;<br><br>வைப்புத்தொகையை நிலையான ஒரு வைப்பாக மாற்றுதல்.<br><br>வேறு எந்த வங்கிக் கணக்கிற்கும் பணத்தை மாற்றுதல்.<br><br>சம்பளக் கட்டளை மூலம் வருமானம் பெறுதல்.<br><br>வருமானத்தை ரூ. 10,000 மடங்குகளில் புதுப்பித்து, மீதியை வாடிக்கையாளர் கணக்கு/பிற வங்கிக் கணக்கில் வரவு வைத்தல்/ காசோலையை வாடிக்கையாளரின் முகவரிக்கு அனுப்புதல். |

- இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, அனைத்து பொதுவான நியதிகள் மற்றும் நிபந்தனைகளும் காலவரை முதலீட்டுக் கணக்கிற்கு ஏற்புடையதாகும் என்பதுடன் முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறைகளானது பொதுவான வியாபார நிபந்தனைகளின் கீழுள்ள https://www.nationstrust.com/images/pdf/general-business-conditions pdf இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

- அவ்வப்போது திருத்தத்திற்கு உட்படும் கட்டண வகைகள் மற்றும் வங்கியின் ஏனைய கட்டணங்கள் ஆகியன வங்கியின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும்.

- இந்த வங்கியானது, ரூ. 1,100,000/- வரை வைப்பிலிடுகின்ற ஒரு வைப்பீட்டாளருக்குப் பாதுகாப்பு வழங்குகின்ற இலங்கை மத்திய வங்கியின் (CBSL) கீழ் இயங்குகின்ற இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் (SLDIS) ஓர் உறுப்பினராகும்.

- இந்த ஆவணத்தின் ஆங்கில, சிங்கள மற்றும் தமிழ்ப் பிரதிகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்பட்டால், இதன் ஆங்கிலப் பிரதியே செல்லுபடியானதாகக் கருதப்படும்.